06.08.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 43/2021</u>

அ.சா.14

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ் | | |
| த/பெ | குப்பன் | | |
| கிராமம் | பள்ளிபுதுப்பட்டு | தொழில் | |
| தாலுக்கா | கண்டமங்கலம் | வயது | 30/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது டிரைவிங் வேலை செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ராஜ்கிரன் இறந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் ராஜ்கிரன் வீட்டிற்கு வந்து விசாரணை செய்தார்கள். அப்போது என்னை போலீசார் பார்த்தார்கள். ஒரு கையெழுத்து போடுங்கள் என்று கேட்டார்கள். நான் எதற்கு என்று கேட்டேன். ஊருக்கு வந்ததற்காக கையெழுத்து போடச்சொன்னார்கள் நான் போட்டேன். அதில் எதாவது எழுதி இருந்ததா என்றால் எழுதப்படவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர்-2ல் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் இது சம்மந்தமாக வேறு எதுவும் விசாரணை செய்யவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 03.05.2019ந் தேதியில் மாலை 7 மணியளவில் ராஜ்கிரன் கொலை வழக்கு சம்மந்தமாக பள்ளிபுதுப்பட்டில் உள்ள ராஜ்கிரனின் வீட்டில் கண்டமங்கலம் காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் ராஜ்கிரனின் வீட்டை ( சம்பவ இடத்தை ) பார்வையிட்டு வரைபடம்

மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த சக்திமுருகன் மகன் சற்குணன் என்பவரும் கையொப்பம் போட்டோம் என்றும், தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**மறுவிசாரணை**

**இல்லை.**